[5th November 1966

பிடிக்கப்பட்டது. எனவே, அக்கிராமங்களில் பற்றுக்குறை நிலைமை 27-12-1965 முதல் 9-1-1966 வரையில் இரண்டு வார கால அளவுக்கு ஒவ்வொரு குடும்பத்துக்கும் வாரம் ஒன்றுக்கு இரண்டு படி அரிசியும் ஐம்பது காசு மதிப்புக்கு மரவள்ளிக் கிழங்கும் இலவசமாக வழங்கப்பட்டன.

(இ) மீனவர்கள் அதிக அளவில் மீன்பிடிப்பது வசதியாக இருக்கும் விசைப்படகுகளும் மீன்பிடி வலைகளுக்கான நைலான் நாலும் தொகுதியாகவுள்ள மீனவர்களுக்கு உதவித்தொகை நலனைக் கொள்முதல் (subsidised hire purchase) அடிப் படையில் வழங்கப்படுகின்றன. வலைகளைப் பின்னுவதற்காக மீனவர்களுக்குக் குறைந்த விலையில் பருத்தி நூலும் வழங்கப் படுகின்றது. மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மீனவர்களுக்கு குறுகிய கால, நடுத்தரக்காலக் கடன்களும் வழங்கப்படுகின்றன. இவைதவிர புயல் சேதம், வெள்ளம், மீன் கிடைக்காமலிருத்தல் போன்ற இடர்கள் ஏற்படும் காலங்களில் மீனவர்களின் துயரத்தை உடனே தணிப்பதற்காக "மீனவர் துயர் தணிப்பு நிதி" என்கிற ஒரு நிதியை அரசாங்கம் அமைத்துள்ளது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: இந்த ஆண்டு ஏப்ரல் 30-ஆம்
10-00 a.m. தேதி அடித்த புயலினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு எல்லாம் அரசாங்கத்திலிருந்து ஓரளவுக்கு நன்மைகள் அளித்தார்கள், உபகாரம் செய்தார்கள், கடன் அளித்தார்கள். கடந்த இரண்டு மூன்று நாட்களாக அடித்த புயலினால் குறிப்பாக எனது பகுதியிலே உள்ளவர்கள் எல்லாம் குடும்பத்தோடு மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. ஆகவே, அங்கேயெல்லாம் நிவாரணம் அளிக்க உடனடியாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது?

கனம் திரு. கோ. பூவராகன்: எப்பொழுதும் போல் உடனடி யாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அவர் களுக்கு நிவாரணமும் அளிக்கப்படுகிறது.

கனம் சபாநாயகர்: கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—ADJOURNMENT MOTIONS.

(1) DAMAGE CAUSED BY BREACH IN VIDUR RESERVOIR.

*** திரு. ஆ. தங்கவேலு:** கனம் சட்ட மன்றத் தலைவரவர்களே, 3-11-1966-ல் ஏற்பட்ட கோடூரப் புயல், கடுமையான மழையின் காரணமாக திண்டிவனம் வட்டத்திலுள்ள வீடூர் நீர்த்தேக்கம் உடைந்து பெருத்த சேதம் ஏற்பட்டுள்ள அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பயங்கர நிலையைப்பற்றி விவாதிக்க மன்றத்தின் மற்ற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்பதற் காக நான் இந்த ஒத்திவைப்புப் பிரேரணையைக் கொடுத்திருக் கிறேன்.

5th November 1966] [திரு. ஆ. தங்கவேலு]

தலைவரவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்னால் ஏற்பட்ட கொடூரமான புயலின் காரணமாக திண்டிவனம் வட்டத்திலே பெருத்த சேதம் ஏற்பட்டிருப்பதோடு, விடூர் நீர்த்தேக்கம் உடைந்து மிகுந்த சேதம் ஏற்பட்டு அங்குள்ள விவசாயிகள், பொது மக்கள் மிகுந்த கஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். அவர்களுக்கு வசதிகளைச் செய்து கொடுக்கவும், நிவாரணம் உடனடியாக அளிக்கவும் இந்த விஷயத்தைப்பற்றி விவாதிப்பதற்கு இந்தச் சபையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்திவைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்தப் புயலினால் ஏற்பட்ட சேதங்கள், சென்னை நகரத்தில் மட்டுமல்ல, வேறு மாவட்டங்களிலும் இருக்கின்றன; தென் ஆற்காடு மாவட்டத்திலும் இருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. அதிகாரிகள் இதிலே வேண்டிய கவனம் செலுத்திக் கொண்டு வருகிறார்கள். எத்தகைய நிவாரணம் அளிப்பதென்று நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இதைப்பற்றிய விரிவான அறிக்கை—எந்த, எந்த இடங்களிலே எத்தகைய நிவாரணங்கள் அளிக்கப்படுகின்றன என்பதைப்பற்றியெல்லாம் —7, 8 தேதியில் சமர்ப்பிக்கப்படும் என்று நேற்றே சொன்னேன். ஆகவே இப்பொழுது அதைப்பற்றி விவாதித்துப் பயன் இல்லை. மேலும் இது ஒத்திவைப்புப் பிரேரணைக்கு உரியதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER: A statement will be made within two days. So, consent is withheld.

(2) ESTABLISHMENT OF A STEEL PLANT AT SALEM

SRI M. KALYANASUNDARAM: Sir, I have given notice of two adjournment motions.

MR. SPEAKER: I do not think the hon. Member will press the adjournment motion regarding the Neyveli–Salem Steel Plant. A number of questions have been put on the subject during question hour to-day and the Ministers have answered them.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கேள்விகளிலிருந்து தகவல்கள் தான் கிடைத்தது. அந்தத் தகவல்களின் மேல் விவாதிப்பதற்குச் சந்தர்ப்பம் வேண்டும் . . .

MR. SPEAKER: Already the adjournment motion on the same matter given notice of by Sri S. Madhavan came up before the House two days ago.

திரு. மீ. கலியாணசுந்தரம்: இன்றைக்கு நிலைமை வேறு . . .

MR. SPEAKER: That is why I allowed fifteen minutes for the question.

திரு. மீ. கலியாணசுந்தரம்: திரு. மாதவன் அவர்கள் கொடுத்த நிலைமையிலிருந்து இப்பொழுது புதிய நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. உருக்காலை போன்ற தொழில்வளத் திட்டங்களிலே அரசியலைப் பயன்படுத்தக்கூடாது என்பதுதான் நியாயம்.